# ஆண்டறிக்கை

# 2017

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை**




சிறுவர்களுக்கு சாதகமான மற்றும் பாதுகாப்பான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.




சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

# 2017 ஆம் ஆண்டுக்கான
# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| கலாநிதி திருமதி நதாஷா பாலேந்திர | தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,<br>இல. 330<br>தலவத்துகொட வீதி<br>மாதிவெல<br>ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| சட்டதரணி திருமதி. மரினி லிவேரா (2017 ஏப்ரல் மாதம் முதல்) | பிரதி தவிசாளர்<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை<br>இல. 330<br>தலவத்துகொட வீதி<br>மாதிவெல<br>ஸ்ரீ ஜயவர்த்தனபுா |
| சட்டத்தரணி திரு சஜீவ சமரநாயக்க<br>(2017 யூன் மாதம் வரை)<br><br>சட்டதரணி திரு எச். எம். அபேரத்ன (2017 டிசம்பர் மாதம் முதல்) | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை<br>இல. 330<br>தலவத்துகொட வீதி<br>மாதிவெல<br>ஸ்ரீ ஜயவர்த்தனபுா |
| டாக்டர் திரு எஸ். பி. கந்தபொல ஆரச்சிகே | உளவியல் மருத்துவ நிபுனர்<br>ஆதார வைத்தியசாலை<br>கம்பஹா |
| டாக்டர் திரு யூ. ஏ. கே. தென்னக்கோன் | நீதிமன்ற மருத்துவ அலுவலர்<br>நச்சுயியல் மற்றும் சட்ட மருத்துவ நிறுவகம்<br>இல. 111<br>பிரான்சிஸ் வீதி<br>கொழும்பு 10 |
| கலாநிதி திரு ரீ. சுவீந்திரன் | உளவியல் நிபுணர்<br>இல. 06<br>பெரேரா மாவத்தை<br>கொழும்பு 10 |
| திரு கே. வைத்தியரத்ன<br><br>திரு டி. பி. ஜே. டி லிவேரா<br>(2017 யூன் முதல்) | சிரேஷ்ட மேலதிக சொலிசிடர் ஜெனரல்<br>சட்ட மாஅதிபர் திணைக்களம்<br>கொழும்பு 12 |

| | |
|---|---|
| திரு எம்.ஆர். லத்தீப் | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்<br>சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அலுவலகம்<br>பொலிஸ் தலைமையகம்<br>கொழும்பு 01 |
| திருமதி சந்திமா சிகேரா | ஆணையாளர்<br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்<br>II ஆம் கட்டம், செத்சிறிபாய<br>பத்தரமுல்லை |
| திருமதி சாந்தனீ அமரதுங்க<br><br>திரு. எ. விமலவீர<br>(2017 ஜீலை முதல்) | தொழில் ஆணையாளர் நாயகம்<br>தொழில் திணைக்களம்<br>கொழும்பு 05 |
| திருமதி டி.எஸ். விஜேசேகர<br>(2017 ஆகஸ்ட் வரை) | மேலதிகச் செயலாளர்<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு,<br>II ஆம் கட்டம்<br>செத்சிறிபாய<br>பத்தரமுல்லை |
| திரு ஆர்.எம்.ஏ. ரத்நாயக்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம்,<br>திறைசேரி நடவடிக்கை திணைக்களம்<br>நிதி அமைச்சு<br>கொழும்பு 01 |
| திரு சிறிவர்த்தன தஹநாயக்க | உறுப்பினர்<br>இல. 3280<br>கட்டம் III<br>அநுராதபுரம் |
| திரு எம்.டபிள்யு. ஜயவர்த்தன | உறுப்பினர்<br>இல. 2795<br>டி.எஸ். சேனாநாயக்க மாவத்தை<br>கட்டம் III<br>அநுராதபுரம் |

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான சபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திருமதி பியுமந்தி பீரிஸ்<br><br><br><br>திருமதி ரோஷினி விலாசிதா<br>(2017 ஏப்ரல் முதல்) | மேலதிகச் செயலாளர்<br>நீதி அமைச்சு<br>கொழும்பு 12<br><br>சிரேஷ்ட உதவிச் செயலாளர் |
| கலாநிதி திரு மதுர எம்.<br>வேஹெல்ல | மேலதிகச் செலயாளர்<br>கல்வி அமைச்சு, இசுறுபாய<br>பத்தரமுல்ல |
| திரு எஸ்.சீ. விதான<br><br>திரு டபிள்யு.ஏ. குலசூரிய<br>(2017 மார்ச் முதல்) | மேலதிகச் செயலாளர்<br>பாதுகாப்பு அமைச்சு, சாரணர் மாவத்தை<br>கொழும்பு 03 |
| திருமதி ஏ. எம். கே. கே.<br>அத்தநாயக்க | மேலதிகச் செலயாளர்<br>சுகாதார பாதுகாப்பு மற்றும் போசணை அமைச்சு<br>இல. 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவன்ச<br>தேரோ மாவத்தை<br>கொழும்பு 10 |
| திருமதி பீ.ஜே.டி. பெர்ணாந்து | சிரேஷ்ட உதவிச் செலயாளர்<br>சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு<br>செத்சிறிபாய<br>பத்தரமுல்லை |
| திருமதி யூ. எஸ். கே.<br>தெனாவத்த | மேலதிக செயலாளர்<br>உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு<br>இல. 330, யூனியன் பிளேஸ்<br>கொழும்பு 02 |
| திரு.எச். எல். டி. சொய்சா<br>(2017 நொவம்பர் முதல்) | மூத்த உதவி செயலாளர்<br>மேலதிக செயலாளர்<br>உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு<br>இல. 330, யூனியன் பிளேஸ்<br>கொழும்பு 02 |
| திரு பீ. மஹாதேவ | ஆணையாளர்<br>மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு<br>தொழில் திணைக்களம், கொழும்பு 05 |
| திருமதி ஹேமா பெரேரா | சிரேஷ்ட உதவிச் செயலாளர்<br>வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு<br>இல. 163, கிருலப்பனை மாவத்தை<br>பொல்ஹேன்கொட<br>கொழும்பு 05 |

| உள்ளடக்கம் | பக்க இல. |
|---|---|
| பக்க இல. | 01 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி விரிவாக | 02 |
| அதிகார சபையின் ஒழுங்கமைப்பு | 04 |
| 2017 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு | 05 |
| 2017 ஆம் அண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 06 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| சிறுவர் பாதுகாப்புக்கான தேசியக் கொள்கை | 07 |
| பாடசாலை பாடவிதானத்திற்கு வாழ்க்கைத்திறனை அறிமுகம் செய்தல் | 07 |
| சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பற்றிய சம்பவ முகாமைத்துவ வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல் | 07 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல் | |
| திடீர் அனத்த நிலைமைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய சிறுவர் பாதுகாப்புக்கான வழிகாட்டல் கையேடு | 09 |
| பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டியைத் தயார் செய்தல் | 09 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பை தயார் செய்தல் | 10 |
| கதிர்காமம் புனித பூமியை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வீதிச் சிறுவர்கள் பற்றிய முன்னோடிக் கருத்திட்டம் | 10 |
| கரையோர வலயங்களில் சிறுவர் பாதுகாப்புக்கான முன்னோடிக் கருத்திட்டம் | 11 |
| சிறுவர்களுக்கு நட்புறவான பாடசாலை சூழலை உருவாக்கல் | 12 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சமுதாயத்தினருடன் நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர்களை அறிவுறுத்தல் | 13 |
| பிரதேச நிகழ்ச்சித்திட்டங்கள் | 13 |
| தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களை விழிப்புணர்வூட்டல் | 14 |
| சுகாதார தொழில்சார் வல்லுனர்களின் திறன் அபிவிருத்தி | 14 |
| பொலிஸ் அலுவலர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 14 |
| சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 15 |
| தேயிலைத் தோட்டங்களை மையமாகக் கொண்டு வாழும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் | 15 |
| இணையத்தளப் பாதுகாப்பு பற்றி மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு அலுவலர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 16 |
| சிறுவர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் பாடசாலை ஊடக அலகுகளை ஒருங்கிணைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 16 |
| விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் போது பயன்படுத்திக் கொள்வதற்கான விவரண நிகழ்ச்சித்திட்டமொன்றை வடிவமைத்தல் | 17 |

| | |
|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய தகவல் இணையத்தளததை வடிவமைத்தல். | 17 |
| சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினம் | 17 |
| சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினம் | 18 |
| உலக சிறுவர் தினம் | 18 |
| சர்வதேச சிறுமியர் தினம் | 19 |
| கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்தல் | 20 |
| தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் | 20 |
| சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 21 |
| சிறுவர் துஂபிரயோகங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்தல் | 21 |
| சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற மற்றும் அறக்கட்டளை நிறுவனங்கள் (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) தொடர்பில் கண்காணிப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 21 |
| உளவியல் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான உதவியை பெற்றுக் கொடுத்தல் | 22 |
| இலங்கையில் பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற பிள்ளைகளை பண்புடையவர்களாக்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சிக் கற்கை | 22 |
| சிறுவயதுத் திருமணத்தைத் தடுப்பதற்காக மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 22 |
| 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை | 23 |
| சிறுவர் துஂபிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் | 23 |
| சட்டப் பணிகள் | 23 |
| விசேட பொலிஸ் விசாரணைகள் | 25 |
| 2017.12.31 ஆம் திகதிக்கான வருமானக் கூற்று | 26 |
| 2017.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று | 27 |
| 2017.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 29 |
| 2017.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றம் பற்றிய கூற்று | 31 |
| கணக்காய்வு அறிக்கை | 32 |

# அறிமுகம்

தற்போது சிறுவர் துஂ'பிரயோகம் இடம்பெறுகின்ற முறையில் வித்தியாசம் காணப்படுகின்றது. இதன் போது சிறுவர்கள் குரூரத்தன்மைக்கு ஆளாவதில் அதிகரிப்பு காணப்படுகின்றது. மேலும், கணினி மற்றும் இணையத்தளத்தினைப் பயன்படுத்தும் போக்கு காணப்படுகின்ற பொதிலும், மேற்படி சிறுவர் துஂ'பிரயோகங்கள் அறிக்கையிடப்படாத போக்கை இனங்காண முடியும். இந்த விடயங்களை இனங்கண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சிறுவர் துஂ'பிரயோகங்களை தடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஷஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்' உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் ம்றறும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் தொடர்பாகக் காணப்படுகின்ற சமூக நிலைமையை ஆராயும் போது, சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரத் தொழில், சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குமப் பயன்படுத்துவதை நோக்கக் கொண்டு, சர்வதேச இரகசிய வியாபாரம் அதிகரிப்பது பற்றித் தீவிர கவனம் செலுத்தி, ஆயுதப் போராட்டங்களில் சிறுவர்கள் பலாத்காரமாக யுத்த சேவையில் ஈடுபடுத்தப்படல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதை சர்வதேச குற்றமொன்றாக குறிப்பிட்டு 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குமப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

உலகில் காணப்பட்ட இந்தப் போக்குடன் இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1991 ஆம் ஆண்டு கைஒப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன் போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஂ'பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஂ'பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஂ'பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளசமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகார சபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகார சபைக்கு அறியக் கிடைக்கும் போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஃபிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி “1929” இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஃபிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஃபிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களுக்காக இந்த ஆண்டிலும் தமது அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

## பிரதான செயற்பணி

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

- சிறுவர் துஃபிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஃபிரயோகத்துக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.

- சிறுவர் துஃபிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- அவ்வாறான துஃபிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- துஃபிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

- சிறுவர் துஃபிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஃபிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப் பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்;ராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளை ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்.

- சிறுவர் துஃபிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

- சகல வகையிலும் சிறுவர் துஃபிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குபடுத்தல்.

- ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல் மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக் கொள்வதும்.

- குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்;ராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக் கட்டமைப்பை தயார் செய்வதும், அதனை பேணிவருவதும்.

- சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குறுத்தல்களும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும் மேம்படுத்துவதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.

- சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.


- சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்திக் கொள்வதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

## அதிகார சபையின் ஒழுங்கமைப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமையகத்தில் பின்வரும் அலகுகள் இயங்கிவருகின்றன.

- நிருவாகம் மற்றும் மனித வளப் பிரிவு
- நிதிப் பிரிவு
- திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் பிரிவு
- தகவல் மற்றும் ஊடகப் பிரிவு
  - நூலகம
- நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
- உளவியல் சமூக பிரிவு
- சட்டப் பிரிவு
- சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
  - 1929 இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவை
  - விசாரணை அலகு
  - மத்திய ஆவணக்காப்பகம்
- உள்ளகக் கணக்காய்வு பிரிவு
- விசேட பொலிஸ் விசாரணை பிரிவு

# 2017 ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின நிறுவன ஒழுங்கமைப்பு



## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2017 மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM -2-1 | 01 | 01 |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM -1-3 | 01 | - |
| 03 | பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 | 01 |
| 04 | பணிப்பாளர் - நிதி | HM -1-1 | 01 | - |
| 05 | பணிப்பாளர் - சட்டம் | HM -1-1 | 01 | - |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 | 01 |
| 07 | பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 | 01 |
| 08 | பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 | 01 |
| 09 | பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 | - |
| 10 | உதவி பணிப்பாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 | 01 |
| 11 | உதவி பணிப்பாளர் - சட்டம் | MM -1-1 | 01 | 01 |
| 12 | உதவி பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | MM -1-1 | 01 | 01 |
| 13 | உதவி பணிப்பாளர் - உளவியல் | MM -1-1 | 01 | 01 |
| 14 | உதவி முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | MM -1-1 | 01 | 01 |
| 15 | உதவி முகாமையாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 | - |
| 16 | உதவி முகாமையாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 | 01 |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 | 01 |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 | 01 |
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM - 1-1 | 01 | - |
| 20 | நிருவாக அலுவலர் | JM - 1-1 | 01 | 01 |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM - 1-1 | 01 | - |
| 22 | கணக்கு அலுவலர் | JM - 1-1 | 01 | 01 |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM - 1-1 | 01 | 01 |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM - 1-1 | 01 | 01 |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM - 1-1 | 01 | 01 |
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM -1-1 | 01 | 01 |
| 27 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 | - |
| 28 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 | - |
| 29 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 25 | 24 |
| 30 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | MA - 3 | 25 | 18 |
| 31 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 360 | 237 |
| 32 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 33 | கணக்குகள் உதவியாளர் | MA - 3 | 03 | 03 |
| 34 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 | 03 |
| 35 | நூலகர் | MA - 3 | 01 | 01 |
| 36 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 | 01 |
| 37 | சட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 |
| 38 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 02 | 02 |
| 39 | ஆலோசனை உதவியாளர் | MA - 3 | 04 | 04 |
| 40 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 |
| 41 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் | MA - 3 | 01 | 01 |
| 42 | இணையத்தள பரிசோதனை உதவியாளர் | MA - 3 | 01 | 01 |
| 43 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 | 02 |
| 44 | வீடியோ தொழில்நுட் உதவியாளர் | MA - 2-1 | 01 | - |
| 45 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA - 2-1 | 15 | 14 |
| 46 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA - 2-1 | 02 | 02 |
| 47 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA - 1-1 | 32 | 30 |
| 48 | சாரதி | PL-3 | 07 | 06 |
| 49 | செய்தி கொண்டுசெல்பவர் (தூதுவர்) | PL-1 | 01 | - |
| 50 | அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 | 02 |
| 51 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 | 01 |
| **மொத்தம்** | | | **527** | **374** |

2017 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது அபிவிருத்திக்கான 3 செயற்றிட்டங்களின் கீழ் இயங்கிவந்தது. தேசிய செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 50), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை வலுவூட்டும் செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 33) மற்றும் சிறுவர் பாதுகாப்புக்கான சமூக பாதுகாப்பு செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 23.480) என்ற வகையில் அவை அமுல்படுத்தப்பட்டன.

# அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2017

## சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசியக் கொள்கை

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையைத் தயார் செய்வது 1988 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் பிரதான செயற்பணியொன்றாகும். அதிகாரசபையின் 14 (அ) பிரிவுக்கு அமைய சிறுவர் நெறிபிறழ்வைத் தடுத்தல் மற்றும் அவ்வாறான நெறிபிறழ்வுக்கு ஆளான பிள்ளைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது பற்றிய தேசியக் கொள்கையைத்த தயார் செய்வதாகும். தற்போது இந்தக் கொள்கையின் வரைவு தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதற்குத் துறைசார் கல்விமான்கள், தொழில்வல்லுனர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து

கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவ்வாறு கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக policy@childprotection.gov.lk எனும் இணையத்தளமும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், தினமின, தினகரம் மற்றும் டேலி நியுஸ் ஆகிய பத்திரிகைகள் மூலமும் பொது மக்களின் கருத்துக்கள் கோரப்பட்டன. சிறுவர் பாதுகாப்பு பற்றிய விடயத்துறையைச் சேர்ந்த நிபுணர்கள் மற்றும் கல்விமான்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதன் மூலம் இந்த வரைவு பற்றி ஆராயப்பட்டு திருத்தங்களும் உள்ளடக்கப்பட்டு, சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசியக் கொள்கையின் வரைவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## பாடசாலை பாடவிதானத்தில் வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்தல்

இதற்காக கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அதிகாரசபை ஆகியன இணைந்து பிள்ளையின் ஆரம்பக் கல்வி முதல் வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டில் 2 ஆம் 3 ஆம் தரத்திற்கு இந்த வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் நோக்கமாக இருப்பது பிள்ளையினுள் உளவியல்சார் அறிவை கட்டியெழுப்பல் மற்றும் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகும். தீர்மானம் மேற்கொள்ளல், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல், ஆக்கபூர்வமான சிந்தனை, தர்க்க ரீதியான சிந்தனை, ஆட்களுக்கு இடையிலான உறவு, சுய புரிந்துணர்வு, தயவு மனப்பான்மை, உணர்வு முகாமைத்துவம் மற்றும் அழுத்த முகாமைத்துவம் போன்ற விடயங்களின் ஊடாக சிறுவர்கள் கற்றுக் கொள்கின்றனர். இதற்குத் தேவையான ஆசிரிய பயிற்சிப் பாடநெறிகளைத் தயார் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் போது ஆசிரிய ஆலோசகர்களுக்கான கற்கை, கற்பித்தல் உதவிகளாக 03 வீடியோ தொகுப்புக்கள் தயார் செய்யப்பட்டன. இது தொடர்பில் 2017 ஆம் ஆண்டு 05 மாகாணங்களில் தரம் 2 மற்றும் 3 இற்கு உரித்தான ஆசிரிய ஆலோசகர்களை அறிவுறுத்தும் 6 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அறிவுறுத்தப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 345 ஆகும். மேலும் வாழ்க்கைத் திறன் மற்றும் புரிந்துணர்வுசார் பாலியல் கல்வியை பாடசாலை பாடவிதானத்தில் உட்புகுத்துவது தொடர்பில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## சிறுவர் அரவணைப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல்

சிறுவர்களின் உச்ச நலனுக்காக செயற்படும் போது சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் வாழும் சிறுவர்களின் அரவணைப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது, சிறுவர் அரவணைப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்ய பிரதானமாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் முக்கிய நோக்கமாக இருப்பது தேசிய மட்டத்தில் ஒவ்வொரு சிறுவர் இல்லத்தையும் (சிறுவர் அபிவிருத்தி நிலையம்) தரமானதன்மை மற்றும் தரப்படுத்தல் செயன்முறையை உறுதி செய்தல் மற்றும் பாதுகாப்பு, சிறுவர்களுக்கு நட்புறவான சிறுவர் இல்ல (சிறுவர் அபிவிருத்தி நிலையம்) சேவைகளை மேம்படுத்துவதாகும். இதன் வரைவு தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இதனைத் தயார் செய்வதற்கான ஆரம்ப கலந்துரையாடலொன்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தலைமையில் மாகாண நன்னடததை ஆணையாளர்களுடன் நடாத்தப்பட்டுள்ளது.

## திடீர் அனர்த்த நிலைமைகளின் போது நடவடிக்கை மேற்கொள்ளல்

வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, பூமிஅதிர்ச்சி மற்றும் சுனாமி நிலைமைகள் காரணமாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனர்த்த நிலைமை ஏற்பட முடியும். அவ்வாறான அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். எனவே அனர்த்த நிலைமையின் போது சிறுவர்களை அரவணைப்புச் செய்வது விசேட கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இங்கு முகாம்களில் சிறுவர்களின் உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். இதனைக் கவனத்தில் கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் இணைந்து இவ்வாறான சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக உளவியல், சமூக முதலுதவி உள்ளடங்களாக கையேடொன்றைத் தயார் செய்ய ஆரம்பித்துள்ளது. இதன் நோக்கமாக இருப்பது சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், உளவியல் சமூக செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு குடும்பத்திற்கும், பிள்ளைக்கும் இடையிலான தொடர்பை கட்டியெழுப்பல் மற்றும் சமுதாயத்தை வலுவூட்டுவதாகும். இதற்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்புடையதாகின்ற தகவல்கள் சேகரித்து முடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் இடம்பெற்ற மண்சரிவு திடீர் அனர்த்த நிலைமை மற்றும் கொழும்பைச் சூழ இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் முகாம்களில் இருப்பவர்ககளுக்கான நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் மீதொட்டுமுல்ல குப்பை மேட்டினால் ஏற்பட்ட அனர்த்த நிலைமையின் போதும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலர்கள், தலைமை அலுவலக அலுவலர்கள் மற்றும் உளவியல் சமூகப் பிரிவின் அலுவலர்கள் இதில் பங்கேற்றனர்.

## சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, பிரதமர் அலுவலகம், சிறுவர் செயலகம் மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை முன்னோடியாகச் செயற்பட்டு பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டலைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதன் நோக்கம் தேசிய மட்டத்தில் ஒவ்வொரு பகல் நேர பராமரிப்பு நிலையத்தினதும் தரமானதன்மை மற்றும் தரப்படுத்தப்பட்ட செயன்முறையை உறுதி செய்தல் மற்றும் தொழில்சார் மற்றும் பாதுகாப்பான பகல்நேர பராமரிப்பு நிலைய சேவையை அபிவிருத்தி செய்வதாகும். பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டலின் வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது. இது நேர்வரிசை அமைச்சான மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. 2017.07.25 ஆம் திகதி இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும் வழிகாட்டியை அமுல்படுத்துவது தொடர்பிலான செயற்றிட்டமும் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதன் 5000 பிரதிகளை அச்சிடத் தேவையான ஆரம்பகட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சிறுவர் பாதுகாப்பு பாடநெறி (Child care NVQ 4)

2016 ஆம் ஆண்டில் ரூ.மி. 50 ஆன தொகை சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குவோரின் கடமைகளை தரப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் தொடர்பிலான தேசிய வழிகாட்டிக்கு இசைவாக சிறுவர் அரவணைப்பு சான்றிதழ் பாடநெறி (NVQ 4) தயார் செய்யப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கமைய தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA) 5 மாவட்டங்களிலும், (கொழும்பு, களுத்துறை, கண்டி, காலி மற்றும் கிளிநொச்சி) தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA) 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையிலும் இந்தப் பாடநெறியை ஆரம்பித்து நடாத்தி வருகின்றன. இந்தப் பாடநெறியை நடாத்துவதற்கு தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய ஆலோசகர்களுக்கான பயிற்சியும் (TOT) நடாத்தப்பட்டது. இந்தப் பாடநெறி 12 மொடியுல்களைக் கொண்டுள்ளதுடன், இதற்கான பயிற்சிக் கையேடும் தயார் செய்யப்பட்டுள்ளது.

## சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பொன்றைத் தயார் செய்தல்

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் போது அது தொடர்பில் முறையான வேலைத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதை கட்டாயமாக முன்னெடுக்க வேண்டும். இதன் போது விழிப்புணர்வூட்டலை மேற்கொள்வது ஒரு பணியாகும். இங்கு பெரியவர்கள் பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ளும் அறிவு,திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதும் சிறுவர்கள் மத்தியில் தமது பாதுகாப்பு பற்றிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு அபிவிருத்திக்கு வழிகாட்டுவதையும் மேற்கொள்ள வேண்டும். இதன் போது விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதானது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் சிறுவர் செயலக அலுவலர்களினால் மேற்கொள்ளப்படும். மேற்படி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒரே தரத்தைக் கொண்டதாக மேற்கொள்வதற்கு வழிகாட்டல்கள் அவசியமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த வழிகாட்டல் தொகுப்பின் வரைவு தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை அறிவுறுத்துவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கமாக இருப்பது சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது தேசிய ரீதியாக ஒரே முறையியலுக்கு ஏற்புடையவாறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் சிறுவர்களின் பாதுகாப்பை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களை வலுவூட்டுவதாகும். இந்த வழிகாட்டல் வரைவை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவென இரண்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. விழிப்புணர்வூட்டப்பட்டோரின் எண்ணிக்கை 150 ஆகும்.

## கதிர்காமம் புனித பூமியை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வீதிச் சிறுவர்களுக்கான முன்னோடிக் கருத்திட்டம்

கதிர்காமம் புனித பூமியைச் சூழ வாழ்ந்துவருகின்ற வீதிச் சிறுவர்களின் பாதுகாப்புக்காக நடவடிக்கை மேற்கொள்வதற்கு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும் இணைந்து இந்த முன்னோடிக் கருத்திட்டத்தை அமுல்படுத்தின.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு கோதமிகம மற்றும் நாகஹவீதிய கம ஆகிய கிராமங்கள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. இக்கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மற்றும் பெரியவர்களை இலக்காகக் கொண்டு இது அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் சகல சிறுவர்களினதும் மகிழ்ச்சி, தன்னம்பிக்கை, சுயாதீனத்தன்மை மற்றும் ஆக்கபூர்வமானதன்மை ஆகிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு சிறுவர் நட்புறவுக் கிராமிய சூழலை உருவாக்குதல் மற்றும் பெற்றோரின் நல்ல நிலைத்திருத்தல் மேம்படுத்தப்பட்டு சிறுவர்களின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்ற கிராமத்தவர்களை உருவாக்குவதாகும். 2017 ஆம் ஆண்டில் 13 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் 951 பேர் இவற்றில் பங்குபற்றியுள்ளனர்.

## கரையோர வலயங்களில் சிறுவர் பாதுகாப்புக்கான முன்னோடிக் கருத்திட்டம்

கரையோர வலயங்களை மையமாகக் கொண்டு சிறுவர் பாதுகாப்புக்கான முன்னோடிக் கருத்திட்டத்தின் கீழ் 2017 இல் இரண்டாம் கட்டப் பணிகள் ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான நாரிகம வெல்லபட பிரிவில் அமுல்படுத்தப்பட்டது. இதன் நோக்கமாக இருப்பது,சம்பிரதாயபூர்வமாக விழிப்புணர்வூட்டும் முறையியல்களுக்கு அப்பால் சென்று மென்மேலும் விளைதிறன்மிக்கவாறு சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் முறையியல் அறிமுகம் செய்தல் மற்றும் சிறுவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு விழிப்புக் குழுக்களை கிராமிய மட்டத்தில் உருவாக்குவதாகும். ஹிக்கடுவ கல்வி வலயத்தின் 19 பாடசாலைகளில், சிறுவர்களுக்கு சாதகமான பாடசாலை சூழலை உருவாக்குவதன் கீழ் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் 116 பேரின் பங்கேட்புடன் இரண்டு நாள் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. இதன் போது தென் மாகாண கல்விப் பணிப்பாளர்கள், அரச அலுவலர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். 2017 ஆம் ஆண்டில் 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. சிறுவர்கள் 163 பேர் மற்றும் அரச அலுவலர்கள் 150 பேர் மற்றும் சிவில் சமுதாயத்தினர் 89 பேர் இதில் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 02 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.









துண்டுப் பிரசுரங்கள







## சிறுவர்களுக்கு சாதகமான பாடசாலைச் சூழலை உருவாக்கல்

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாட்டின் மூலம் சிறுவர்களுக்கு சாதகமான பாடசாலை சூழலை உருவாக்குவது இதன் எதிர்பார்ப்பாகும். சிறுவர்களை சகல வகையிலுமான துஃபிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வது பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் திறமைகளை பாடசாலை சமுதாயத்தில் மற்றும் சிறுவர்களில் வளர்த்தல் மற்றும் அதற்கு அவர்களை வலுவூட்டுவதற்காக பாடசாலை மட்டத்திலான பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதன் மூலம் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் அபிவிருத்தி செய்யப்படுகின்ற சூழலை பாடசாலையினுள் ஏற்படுத்துவதும், அதற்காக செயற்படுகின்ற பாடசாலை சமுதாயமொன்றை உருவாக்குவதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இதன் போது பல்வேறு துறைகளின் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. கொத்தணி நிகழ்ச்சித்திட்டமாக சிறுவர் நட்புறவு பாடசாலை அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆட்களின் திறன் அவிவிருத்தி பற்றிய பின்னாய்வு மேற்கொள்ளப்படும். பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் தாபிப்பதன் கீழ் 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 987 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 26,305 ஆகும்.

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சமுதாயத்தினருடன் நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்

சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதை நோக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் போது பிரதானமாக சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தீவிரமாக அழுத்தம் கொடுக்கின்ற சுற்றாடல் காரணிகளை மாற்றியமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. அதற்கமைய, பெற்றோர் வெளிநாடு செல்லல், பொருளாதார முரண்பாடுகள் மற்றும் வறுமை, இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு, புரிந்துணர்வு இன்மை மற்றும் மனப்பாங்கு, பெற்றோர் மத்தியிலான பிணக்குகள் மற்றும் குடும்ப வன்முறை, போதைவஸ்து, மதுபானம் மற்றும் புகைப்பிடித்தல், குடும்பத்தில் மகிழ்ச்சி இன்மையும், ஒற்றுமை இன்மையும்,தேவைகள், தேவையற்றவை, வீட்டுச் சூழல் மற்றும் கலாசாரம் போன்ற காரணிகளுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது எவ்வாறு என்பது பற்றிக் கலந்துரையாடப்படுகின்றது.

அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற விழிப்புணர்வூட்டும் முறையியலுக்கு அப்பால் சென்று சமுதாய அபிவிருத்திக்காக நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் அலுவலர்களின் திறன் விருத்தி மூலம் சமுதாயத்தினர் விழிப்புணர்வூட்டப்படுகின்றனர். 2017 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக 239 பிரதேச செயலகங்களுக்கு நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. 224 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 9868 ஆகும்.

## பிரதேச ரீதியான நிகழ்ச்சித்திட்டங்கள்

பிரதேச செயலாளர் பிரிவொன்றில் தகவல்கள் மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து மேற்படி கிராமத்திற்குள் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டமென்று அமுல்படுத்தப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் நோக்கமாக இருப்பது ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து மேற்படி கிராமத்தை சிறுவர்களுக்கு மிகவும் பொருத்தமான இடமாக மாற்றியமைப்பதற்கு கிராமிய சமுதாயத்தை வலுவூட்டுவதற்கான செயற்பாட்டை ஆரம்பிப்பதாகும். இதற்கான பிரேரணையொன்று மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இதற்கமைய 231 பிரேரணைகள் கிடைத்துள்ளன. இந்தப் பிரேரணைகள் தொடர்பிலான திருத்தங்களுக்கு உட்பட்டு அங்கீகரித்துக் கொண்ட பின்னர் குறித்த மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டதுடன், மேற்படி பிரதேசம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் போது குறித்த அலுவலர்கள் தமது பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தினார்கள். அதேவேளை, சிறுவர் செயற்பாட்டு நிலையங்களை நிர்மாணித்தல், சிறுவர் நூலகங்களை ஆரம்பித்தல், சிறுவர் நூலதகங்களுக்கு புதிய புத்தகங்களை கொள்வனவு செய்து நூலகங்களை புதுப்பித்தல், பிள்ளைகளுக்கான ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை நடாத்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் இவ்வாறான 212 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களை,சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அறிவுறுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஆசிரிய தொழிலில் பிரவேசிப்பதற்கு உத்தேசித்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயில்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவையும் மற்றும் ஆற்றல்களையும் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக சிறுவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமான மற்றும் அறிவுமிக்க ஆசிரியர் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதாகும். அதற்கமைய, 2017 ஆம் ஆண்டு ஊவா, பந்துன்ரட்ட, பேராதனை, சாரிபுத்த, சியனே, ருகுண, ருவன்புர, மஹரகம மற்றும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டைச் சேர்ந்த் ஆசிரிய மாணவர்கள் 2,547 பேருக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 09 நடாத்தப்பட்டன.

## சுகாதார தொழில்சார் வல்லுநர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சுகாதாரத் தொழில்சார் வல்லுநர்களின் திறன் அபிவிருத்திக்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. சுகாதாரத் தொழில்சார் வல்லுனர்களை சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு துறைகளிலும் அறிவும், ஆற்றலும்மிக்கவர்களாக மாற்றியமைப்பதன் மூலம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மென்மேலும் உணர்வுப்பூர்வமான ஆட்களை உருவாக்கல், அரச அலுவலர் என்ற வகையில் சிறுவர் து‘பிரயோக சம்பவங்களின் போது அல்லது அவ்வாறான அச்சுறுத்தலான நிலைமையின் போது செயற்பட வேண்டிய முறை பற்றிய உரிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்வதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பட்டப் பின் மருத்துவப் பட்டத்தைக் கற்றுவருகின்ற மருத்துவர்களுக்கான 19 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அறிவுறுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 1220 ஆகும்.

## பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் து‘பிரயோகம் இடம்பெற்றது முதல் பாதிக்கப்பட்ட பிள்ளையின் ஆரம்ப வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொள்வது தொடக்கம் ஆரம்பமாகின்ற ஒட்டுமொத்த நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறையில் சிறுவர்களுக்கு சாதகமான மற்றும் பாதிக்கப்பட்ட பிள்ளையின் ஆள் அடையாளத்தை பாதுகாக்கின்ற முறையியலொன்றைப் பயன்படுத்தல் மற்றும் வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்வது தொடர்பில் பொலிஸ் அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு இதன் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொலிஸ் மாஅதிபரின் கண்காணிப்பின் கீழ் சிபாரிசு செய்யப்பட்ட நாட்டின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அலுவலர்கள் 85 பேருக்கு 05 நாட்களுக்கு வதிவிடப் பயிற்சியொன்று ராகம சிறுவர் இல்ல வளவில் நடாத்தப்பட்டது. இந்த வதிவிடப் பயிற்சிக்கு பிரித்தானிய அரசின் சசெக்ஸ் பொலிஸின் அலுலவர்கள் இருவர் வளவாளர்களாக பங்களிப்புச் செய்தனர். மேலும் வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்தல் மற்றும் அது சம்பந்தமான சட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. குருநாகல் மாவட்டத்தை மையமாகக் கொண்டு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக அலுவலர்கள் 72 பேருக்கும், கேகாலை மற்றும் கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து முறையே அலுவலர்கள் 160 பேர் மற்றும் 70 பேருக்கும் இந்த விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.





## சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் பாதுகாப்புக்காக சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கான பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் போது பாடசாலை மாணவர்கள், பல்வேறு தொழில்வல்லுனர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் சிறுவர்கள் 100 பேர், ஆசிரியர்கள் 59 பேர், தொழில்வல்லுனர்கள் 1280 பேர், சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் 530 பேர், பங்களாதே' தாதிமார் 19 பேர், சிறுவர்கள் மற்றும் பெற்றோர் 135 பேர் மற்றும் கல்வி நிருவாக அலுலவர்கள் 191 பேர் அறிவுறுத்தப்பட்டனர்.





## தோட்டத்துறையில் வாழும் சிறுவர்களின் அரவணைப்பை உறுதி செய்தல

தோட்டத்துறையில் வாழும் குடும்பங்களை சிறுவர்களுக்குப் பாதுகாப்பான குடும்பங்களாக மாற்றியமைத்து அவற்றில் வாழும் சிறுவர்களை மகிழ்ச்சியுடன் வாழும் சிறுவர்களாக மாற்றியமைத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை தோட்டத்துறையில் உருவாக்குவதை நோக்காகக் கொண்டு தோட்டத்துறையில் வாழும் சிறுவர்களின் அரவணைப்பை உறுதி செய்வதற்காக நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 23 தேயிலைத் தோட்டங்களை மையமாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத் தொடரொன்று அமுல்படுத்தப்பட்டது. அதற்கமைய, 2017 ஆம் ஆண்டில் தேயிலைத் தோட்டத்துறையில் வாழும் சிறுவர்கள், பெற்றோர், அரச மற்றும் அரசசார்பற்ற அலுவலர்கள், தோட்ட தலைவர்கள் மற்றும் சமுதாய அங்கத்தவர்கள் 2875 பேருக்கு 76 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## இணையத்தள பாதுகாப்பு தொடர்பில் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு அலுலவர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

இணையத்தளம் ஊடாக சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவதை தடுப்பதற்கு சமுதாயத்துடன் இணைந்து செயற்படுகின்ற அலுவலர்களைப் பயிற்றுவிப்பது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு இணையத்தளத்தை முறைகேடாகப் பயன்படுத்தல் மற்றும் துன்புறுத்தல் பற்றிய அபாயகரமான காரணிகள் பற்றி ஆராயப்படுவதுடன், மேற்படி அபாயகரமான காரணிகளை பாதுகாப்பான காரணிகளாக மாற்றியமைக்கத் தேவையான திறமைகள் மேம்படுத்தப்படும். அத்துடன் இலங்கையில் காணப்படுகின்ற சர்வதேச சிறுவர் குற்றச் செயல்கள் தொடர்பான சட்ட ரீதியான சட்டம் தொடர்பிலும் அறிவுறுத்தப்படும். இணையத்தள கண்காணிப்பு தொடர்பிலான தொழில்நுட்ப முறையியல்கள் பற்றியும் பயிற்சி அளிக்கப்படுவதுடன், இணையத்தளத்தை முறைகேடாகப் பயன்படுத்தி துன்புறுத்தலுக்கு ஆளான சிறுவர்களுக்கு உளவியல் சமூக தலையீடுகள் பற்றிய திறன்கள் இதன் மூலம் வெளிப்படுத்தப்படும். விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள், விரிவுரைகள், குறிப்புகள், வீடியோ மற்றும் சம்பவக் கற்கைகள் பயன்படுத்தப்படுவதுடன், 2017 ஆம் ஆண்டில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் 08 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு அலுவலர்கள் 460 பேர் அறிவுறுத்தப்பட்டனர்.

## சிறுவர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் பாடசாலை ஊடக அலகுகளை ஒருங்கிணைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வது பற்றிய தகவல்களை பாடசாலை ஊடக அலகுகளின் மூலம் பாடசாலைகளில் பிரபல்யப்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பான வழிகாட்டல் தொகுப்பு களனி பல்கலைக் கழக வெகுசனத் தொடர்புசாதன கற்கைப் பிரிவின் ஒத்துழைப்புடன் தயார் செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியன இணைந்து ஒழுங்கு செய்கின்ற பாடசாலை ஊடக சமூகங்களை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மொடியுல் தொடர்பிலான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று 2017.08.28 ஆம் திகதி அதிகாரசபையில் நடாத்தப்பட்டது. இதன் போது கல்வி அமைச்சின் அலுவலர்களினால் பாடசாலை ஊடக அலகுகளுடன் இணைந்து செயற்படுகின்ற முறை பற்றிக் கலந்துரையாடப்பட்டதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக எதிர்காலத்தில் மேற்கொள்வது தொடர்பிலான மொடியூலின் வரைவும் இற்றைப்படுத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 500 பேர் ஆகும்.





## விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் போது பயன்படுத்திக் கொள்வதற்கான விவரண நிகழ்ச்சியொன்றை வடிவமைத்தல்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் போது அச்செய்தியை பலம்மிக்கதாக சமர்ப்பிக்கும் பொருட்டு விவரண நிகழ்ச்சியொன்றை பயன்படுத்துவது உகந்ததாகும். அதற்கமைய தயார் செய்யப்படவுள்ள விவரண நிகழ்ச்சியைத் தயார் செய்வதற்கு Triad (pvt) & Ltd நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் கார்டூன் திரைப்படமொன்றாக இந்த விவரண நிகழ்ச்சி தயார் செய்யப்படுகின்றது. இந்த விவரண நிகழ்ச்சியானது சிறுவர்களுக்கான ஆக்கமொன்றாக இருப்பதுடன் இதன் தொணிப்பொருளாக இருப்பது, “சரியானதை செய்வதற்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வோம்” என்பதாகும்.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய தகவல் இணையத்தளத்தை வடிவமைத்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு மேலதிகமாக சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தகவல்களைக் கொண்ட புதிய இணையத்தளமொன்று தயார் செய்யப்பட்டுள்ளது. இது www.youthink.lk என்ற பெயரில் 2017.03.28 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிறுவர் துʼபிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுப்பது தொடர்பிலான தகவல்கள் மேற்படி புதிய இணையத்தளத்தில் சிறுவர்களுக்கு நட்புறவான முறையில் உட்புகுத்தப்பட்டுள்ளன. அதிகாரசபையின் தகவல்களை கொண்ட இணையத்தளம் மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமும் தற்போது ஐஊவு நிறுவனத்தினால் மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

## சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தினத்தைக் கொண்டாடுதல்

இலங்கை ஒவ்வொரு வருடமும் சனவரி 04 ஆம் திகதியை சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினமாக பிரகடனம் செய்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினத்தை முன்னிட்டு ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், இணையத்தளம் மற்றும் சமூக வலைதளங்கள் ஊடாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.


ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
National Child Protection Authority

## சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினம்

“மோதல் மற்றும் அனர்த்தங்களின் விளைவாக சிறுவர்கள் ஊழியர்களாவதைத் தடுத்தல்” எனும் தொணிப்பொருளை மையமாகக் கொண்டு இம்முறையும் சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினம் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு விசேட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று மாதிவெல ராகுல வித்தியாலயத்தில் நடைபெற்றதுடன்,இதன் விசேட அம்சமாக இருப்பது, “பிந்து குருல்லா ரானிட்ட யாலுவெக்” எனும் வீதி நாடகம் அரங்கேற்றப்பட்டு சிறுவர்களின் பாதுகாப்புக்காக நடவடிக்கை மேற்கொள்ளும் முறையை விளக்கியமையாகும்.

இத்தினத்தை முன்னிட்டு அகில இலங்கை மட்டத்தில் போஸ்டர் ஆக்கப் போட்டியொன்று நடாத்தப்பட்டது. இதில் 14-18 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். போட்ஸ்ர் சுற்றுப்போட்டியில் பங்கேற்ற சகல பாடசாலை மாணவர்களுக்கும் பங்கேட்புக்கான சான்றிதழ் ஒன்று வழங்கிவைக்கப்பட்டது. இதற்கென 430 சான்றிதழ்கள் அச்சிடப்பட்டன.

அத்துடன் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக மாவட்ட மட்டத்தில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 33 நடாத்தப்பட்டதுடன், இதன் மூலம் விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 5203 ஆகும்.





## உலக சிறுவர் தினம

“பெற்றோர், பெரியவர் அன்பை தக்கவைப்போம், அழகிய உலகிற்கு பிள்ளைகளை அழைப்போம்” எனும் தொணிப்பொருளை மையமாகக் கொண்டு இம்முறையும் உலக சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. இதன் தேசிய நிகழ்வு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் அநுராதபுரம் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டது. இத்தினத்தை முன்னிட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நினைவு மலர் ஒன்றையும் தயார் செய்தது.

அத்துடன்,நல்லதரன்கட்டு ஜீவன் சிறுவர் அபிவிருத்தி சேவையின் உலக சிறுவர் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு விசேட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றை சிலாபம், நல்லதரன்கட்டு கல்வாரி தேவாலயத்தில் சனாதிபதி செயலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் உதவியுடன் நடாத்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்தது. இதில் 300 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெரியவர்கள் கலந்துகொண்டனர்.





## சர்வதேச சிறுமியர் தினம

“மகளே பாதுகாப்பான உலகில் பூரணத்துவம் பெற நாம் உங்களுக்கு கைகொடுப்போம்” எனும் தொணிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இம்முறை சர்வதேச சிறுமியர் தினம் கொண்டாடப்பட்டது. இதன் தேசிய நிகழ்ச்சித்திட்டம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் 1000 பேரின் பங்கேட்புடன் பேரணியொன்றும் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் நேரடியாக தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக பிரதேச மட்டத்திலும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டது. 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் ஒரு மாவட்டத்திலிருந்து பின்தங்கிய மற்றும் குறைபாடுகளைக் கொண்ட ஒரு பாடசாலை வீதம் தெரிவு செய்து மேற்படி 25 பாடசாலைகளினதும் மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக சிறுமியரை வலுவூட்டுவதை தொணிப்பொருளாகக் கொண்டு அதிகாரசபையின் தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் தயார் செய்யப்பட்ட விசேட வீதி நாடகத்தை அரங்கேற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.









## கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல்

பல்வேறு நிறுவனங்களினால் கல்விசார் கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுவதுடன், கிடைக்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் மேற்படி கண்காட்சிகளில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக அறிவுறுத்தும் கல்விக் கண்காட்சிக் கூடங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் ஒழுங்கு செய்கின்றது. இந்த ஆண்டில் நடமாடும் கண்காட்சிகளுக்கான புதிய அம்சமொன்றாக 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையை மேம்படுத்துவதற்காக பிந்து குருல்லா ரானிட்ட யாலுவெக் எனும் வீதி நாடமும் இணைத்துக் கொள்ளப்பட்டது. இதன் விசேட அம்சமாக இருப்பது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுலவர்களின் ஆக்கபூர்வமான திறமையை பயன்படுத்திக் கொண்டு காத்திரமான முறையில் சிறுவர் பாதுகாப்பு பற்றிய செய்தியை சமுதாயத்திடம் கொண்டு செல்ல முடிவதாகும். மேன்மைதங்கிய சனாதிபதியின் எண்ணக்கருவின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டுள்ள பிள்ளைகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது தேசிய நிகழ்வு 2017.09.08 ஆம் திகதி நடாத்தப்பட்டது. மேற்படி நிகழ்ச்சித்திட்டத்துக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட நடமாடும் காட்சிக்கூடமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் 09 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 29,100 பேர் ஆகும்.






## தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்

சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றி பொது மக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது தேவைகளின் அடிப்படையில் பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், ஸ்ரிக்கர், அச்சிடப்பட்ட வெளியீடுகள் மற்றும் படரீதியான விவரண நிகழ்ச்சிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ள வெளியீடுகளின் எண்ணிக்கை சிங்களம் மற்றும் தமிழ் என்ற வகையில் 326,245 ஆகும்.

## சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

சுனாமி அனர்த்தத்தின் விளைவாக பெற்றோரை இழந்துள்ள 21 வயதுக்கு குறைவான ஒவ்வொரு பிள்ளைக்கும், இளைஞர்களுக்குமான நலன்புரி நடவடிக்கைகள் பற்றி இதன் கீழ் கவனம் செலுத்தப்படுகின்றது பெற்றோர் இருவரில் ஒருவரையேனும் இழந்துள்ள மற்றும் உயிர்வாழும் தாய் அல்லது தந்தைக்கு பாதுகாப்பதற்கு அல்லது அரவணைப்பதற்கு ஆற்றல் இல்லாத ஒவ்வொரு பிள்ளைக்கும், இளைஞருக்கும் 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் அரவணைப்புப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதன் கீழ் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கப்பகரு பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு நடவடிக்கைகள், பின்னாய்வு நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் 07 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளான சிறுவர்களின் எண்ணிக்கை 95 ஆகும்.

## சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்தல்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்களின் சாட்சிகளை வீடியோகாட்சிகளாக ஒளிப்பதிவு செய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் விசேட அலகொன்று இயங்கிவருகின்றது. 1999 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சாட்சிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைய துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியிருக்கின்ற ஒரு சிறுவனின் சாட்சியை வீடியோ ஒளிப்பதிவு செய்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இதன்மூலம் இடமளிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் இவ்வாறான 145 சாட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் கோரிக்கை விடுக்கப்பட்ட நீதிமன்றங்களுக்கு வீடியோ சாட்சிகளின் 67 பிரதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

## சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் (14) க பிரிவுக்கு அமைய சிறுவர்களுக்கு சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற சகல சமய மற்றும் அறக் கட்டளை நிறுவனங்களையும் (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களுக்கு உச்சளவில் நலன்புரியைச் செய்துகொடுப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் சிறுவர் இல்லங்களை கண்காணிப்புச் செய்யும் பணி நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டது. இதன் நோக்கமாக இருப்பது, சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்தல் மற்றும் குறித்த தீர்வுகளைத் தேடிப் பெற்றுக் கொள்வது தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களுடனும் இணைந்து கூட்டுக் கண்காணிப்பு அணுகுமுறையின் கீழ் மென்மேலும் வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் மேற்கொள்ளல், இல்லமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கின்ற மென்மேலும் பாதுகாப்பான நிறுவனச் சூழலை உருவாக்குதல் மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்தல் போன்றனவாகும். 2017 ஆம் ஆண்டில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சமாந்தரமாக மாவட்ட செயலாளர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர் மற்றும் மாகாண

ஆணையாளர்களும் அறிவுறுத்தப்பட்டனர். அதற்கமைய, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் 350 ஐ கண்காணிப்புச் செய்யத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உளவியல் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்குதல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளவியல் சமூகப் பிரிவுக்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகைதருகின்ற பிள்ளைகளுக்கு மற்றும் உளவியல் உதவிகளை எதிர்பார்க்கின்ற பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல். 2017 ஆம் ஆண்டு காலி சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றைச் சேர்ந்த பிள்ளைகள் 80 பேருக்கு உளவியல் சமூக உதவி தேவையான எழுதுகருவி வகைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்ட புளத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான பொருட்களை பெற்றுக் கொடுத்தமை மற்றும் உளவயில் சமூக அலகுக்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகைதந்த பிள்ளைகள் 95 பெருக்கு எழுதுகருவிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. மேலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வீடியோ சாட்சிகளைப் பதிவு செய்வதற்காக வருகைதந்த பிள்ளைகளுக்கு இதன் கீழ் பாடசாலை உபகரணத் தொகுதிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. சிறுவர்களுக்கு ஆலோசனை வழங்குதல், வீடியோ சாட்சிகளைப் பெற்றுக் கொடுக்க சிறுவர்களை ஆயத்தம் செய்தல் மற்றும் உளவியல் சமூகத் தலையீடுகளை பெற்றுக் கொடுத்தல்.

## இலங்கைப் பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற சிறுவர்களை பண்புடையவர்களாக்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளல்

இலங்கையில் பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற சிறுவர்களை பண்புடையவர்களாக்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சிக் கற்கை நிறைவு செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சிக் கற்கையை அடிப்படையாகக் கொண்டு "சத்துட்டு பாசல்" (மகிழ்ச்சிப் பாடசாலை) எனும் முன்னோடிக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்த முன்னோடிக் கருத்திட்டமானது, கொழும்பு, நுவரெலியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 06 பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டது. குறித்த 06 பாடசாலைகளிலும் உடல்ரீதியான தண்டனைக்கு மாற்றுவழிமுறையாகக் காணப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் பயிற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் 7 நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அலுவலர்கள் 50 பேர், மாணவர்கள் 380 பேர், ஆசிரியர்கள் 25 பேர் மற்றும் பெற்றோர் 20 பேர் இதன் கீழ் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.

## சிறு வயது திருமணத்தை தடுப்பதற்காக மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் இது தொடர்பிலான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் பணிகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இது மாவட்ட மட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது. இதன் நோக்கமாக இருப்பது தகவல் சாட்சிகளின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சுகாதார மருத்துவ அலுவலர் பிரிவு தொடர்பில் சிறுவயதுத் திருமணத்தைக் குறைப்பதற்கான கூட்டு அணுகுமுறையைக் கொண்ட முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை தாபித்தல் மற்றும் அதன் பயன்களை சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்வதாகும். இதற்காக 25 மாவட்டங்களிலிருந்தும் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், 17 பிரேரணைகள் கிடைத்தன.

மேற்படி 17 மாவட்டங்களுக்கும் ரூபா 50,000.00 வீதம் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டு 17 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

## 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதை மென்மேலும் விளைதிறன்மிக்கதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் மாற்றியமைப்பதற்காக 1929 இலங்கைச் சிறுவர் உதவித் தொலைபேசி சேவை 2010 ஜூலை 22 ஆந் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கட்டிடத்தொகுதியில் தாபிக்கப்பட்டது. இது சிறுவர் துஷ்பிரயோகங்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் அவற்றுக்கு துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கான முன்னோடி பொறிமுறையாக உள்ளது. சமூகத்தில் மறைந்து காணப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை அறிக்கையிடுகின்ற போக்கு இதன்மூலம் அதிகரித்துள்ளது.

கட்டணம் அறவிடாது இயங்கி வருகின்ற இச் சேவைக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் எவரும் சிறுவர்கள் பற்றி எழுகின்ற சிக்கல்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை செய்வதற்கும், ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதன் மூலம் ஆலோசனை சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த சேவை பிரதானமாக சிறுவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாக உள்ள போதிலும், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சிறுவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்ற பெரியவர்களுக்கு, சிறுவர்கள் தொடர்பாக அவர்களுக்கு உள்ள சிக்கல்கள் மற்றும் சிறுவர்களை வளர்ப்பதில் உள்ள நடைமுறைகள் போன்றன பற்றி கலந்துரையாடுவதற்கும் இந்த சேவையை பயன்படுத்த முடியும். 2017ஆம் ஆண்டில் 1929 தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்துள்ள தொலைபேசி அழைப்புக்களின் எண்ணிக்கை 131,413 ஆகும் என்பதுடன் இவற்றில் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 8320 ஆகும்.

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் அதிகாரசபைக்கு கிடைக்கும் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. 1929 எனும் இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை ஊடாக பெருமளவு முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுவதுடன், அதிகாரசபைக்கு வருகைதந்து முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதன் மூலமும், கடிதம் மூலமும்தேசிய சிறுவர் அதிகார சபைக்கு முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு கிடைக்கின்ற அனைத்து முறைப்பாடுகளும் துரிதமாக விசாரிக்கப்படுவதுடன் முறைப்பாட்டின் தன்மைக்கமைய அவை வகைப்படுத்தப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு கிடைத்துள்ள மொத்த முறைப்பாடுகளின் 9,014 ஆகும்.

## சட்டரீதியான பணிகள்

துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கான சட்டரீதியான, நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சட்டங்களை அமுல்படுத்த ஆலோசனை வழங்குதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சகல புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு

நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்தல் அது சம்பந்தமாக நீதிமன்றங்களில் ஆஜராதல் போன்ற பணிகள் சட்டப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. இதன்போது அதிகாரசபையின் சட்டத்திற்கு மேலதிகமாக, பின்வரும் சட்டங்களுக்கு ஏற்புடையவாறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளை தடுப்பதற்கான சட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கிவருகின்ற சட்டப்பிரிவினால் 2017 ஆம் ஆண்டில் சட்ட ஆலோசனை வழங்குவதன் கீழ் தொலைபேசி மூலம் 436 மற்றும் சேவைபெறுநர்கள் அதிகாரசபைக்கு வருகைதந்து 107 முறைப்பாடுகளை வழங்கியுள்ளனர். மேலும் இந்த அலகின் அலுவலர்கள் 90 தடவைகள் வழக்குகளில் ஆஜராகியுள்ளனர். 80 கூட்டங்களிலும் இந்த அலகின் அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

## 2017 ஆம் ஆண்டில் 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்துக்கு அமைய சட்டப் பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு)

| நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 06 |
| மாத்தறை நீதவான் நீதிமன்றம் | 19 |
| காலி நீதவான் நீதிமன்றம் | 05 |
| ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் | 29 |
| கல்முனை நீதவான் நீதிமன்றம் | 24 |
| களுத்துறை நீதவான் நீதிமன்றம் | 03 |
| பலபிட்டி நீதவான் நீதிமன்றம் | 10 |
| வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் | 02 |
| பத்தேகம நீதவான் நீதிமன்றம் | 01 |
| **மொத்தம்** | **99** |

**2017 ஆம் ஆண்டு சட்டப் பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு)**

| **நீதிமன்றம்** | **வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 08 |
| கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 06 |
| குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றம் | 01 |
| தெஹிஅத்தகண்டிய நீதவான் நீதிமன்றம் | 03 |
| கெஸ்பேவ நீதவான் நீதிமன்றம் | 01 |
| கொழும்பு நீதவான் நீதிமன்றம் | 01 |
| ஹிங்குரக்கொட நீதவான் நீதிமன்றம் | 01 |
| மாவனெல்ல நீதவான் நீதிமன்றம் | 01 |
| **மொத்தம்** | **22** |

## பொலிஸ் விசேட விசாரணைகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை ஊடாக மற்றும் வேறு முறைகளின் மூலம் பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற சிறுவர் துஃபிரயோகம் பற்றிய முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்து சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பொலிஸ் விசாரணை அலகு நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதற்காக 24 மணி நேரமும் இயங்கிவருகின்ற அலுவலர்கள் 34 பேரைக் கொண்ட குழு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இந்த அலகுக்கு 60 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

**2017 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள்**

| **முறைப்பாட்டின் தன்மை** | **முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **விசாரணையின் தற்போதைய நிலைமை (ஆரம்ப பொலிஸ் விசாரணை)** | **நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற எண்ணிக்கை** | **நீதிமன்றத்தில் விசாரணை முடிந்துள்ளவை** |
|---|---|---|---|---|
| சிறிய குற்றச் செயல்கள் | 32 | 32 | 32 | 06 |
| நானாவித முறைப்பாடுகள் | 46 | 46 | 15 | - |
| சிறுவர் குற்றச்செயல்கள் | 31 | 31 | 31 | - |
| **மொத்தம்** | **109** | **109** | **78** | **06** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
## 2017.12.31 ஆம் திகதியுடன்
## நிறைவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக் கூற்று

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2017 | 2016 சீராக்கல் செய்யப்பட்ட கணக்கு | 2016 |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| மீண்டுவரும் கொடை - திறைசேரி | | 230,972,593.19 | 240,703,967.00 | 240,703,967.00 |
| - ஏனைய நிறுவனங்கள் | 1A | 1,197,600.01 | 1,094,000.00 | 1,094,000.00 |
| ஏனைய வருமானங்கள் | 1B | 23,966,627.04 | 87,788,549.23 | 271,179.72 |
| தேசிய செயற்றிட்டத்திற்கு திறைசேரியின் கொடை | | 39,362,693.04 | 153,946,188.77 | 155,812,159.96 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான கொடை | 1C | 448,800.00 | 214,000.00 | 214,000.00 |
| **மொத்த வருமானம்** | | **295,948,313.28** | **483,746,705.00** | **398,095,306.68** |
| **செலவினம்** | | | | |
| நிருவாக செலவினம் | 2 | 214,624,146.43 | 209,200,244.78 | 208,768,284.47 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 3 | 98,018,188.89 | 145,207,921.12 | 156,606,259.76 |
| கருத்திட்டச் செலவினம் | 4 | 1,197,600.01 | 2,564,750.18 | 2,564,263.33 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் செலவினம் | 5 | 594,300.00 | 414,848.10 | 424,848.10 |
| நிதிச் செலவினம் | 6 | 12,750.72 | 30,340.29 | 30,340.29 |
| **மொத்த செலவினம்** | | **314,446,986.05** | **357,418,104.47** | **368,393,995.95** |
| **தேறிய மிகை கூ (குறை)** | **7** | **(18,498,672.77)** | **126,328,600.53** | **29,701,310.73** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
## 2017.12.31 ஆம் திகதியுடன்
## நிதி நிலைமைக் கூற்று

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2017 | 2016 சீராக்கல் செய்யப்பட்ட கணக்கு | 2016 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 103,384,535.03 | 102,278,961.31 | 103,863,315.64 |
| குத்தகைக் காணி | | 22,486,947.61 | 23,265,988.71 | 23,265,988.71 |
| முதலீடும், சேமிப்பும் | 9 | 8,040,348.65 | 8,280,842.30 | 9,734,766.20 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய சொத்துக்கள் | 10 | 1,020,779.99 | 100,226.70 | 100,226.70 |
| | | **134,932,611.28** | **133,926,019.02** | **136,964,297.25** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பொருட்களின் இருப்பு - எழுதுகருவி | | 459,919.81 | 439,315.09 | 439,315.09 |
| இடர் கடன | | 470,734.14 | 470,734.14 | 470,734.14 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 11 | 24,135,268.31 | 38,303,823.98 | 44,339,323.96 |
| முற்பணக் கொடுப்பனவு | 12 | 607,562.00 | 2,585,313.31 | 2,588,313.31 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 13 | 4,256,729.99 | 40,236,116.03 | 42,046,055.76 |
| | | **29,930,214.25** | **82,035,302.55** | **89,883,742.26** |
| **மொத்த சொத்துக்கள்** | | **164,862,825.53** | **215,961,321.57** | **226,848,039.51** |

| | | | | |
|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | |
| ஓய்வூதியப் பணிக்கொடை | | 11,850,245.00 | 7,506,274.00 | 7,506,274.00 |
| வரையறுக்கப்பட்ட நிதி | 14 | - | 465,404.00 | 465,404.00 |
| கருத்திட்ட மிகை அல்லது குறை | 15 - A | 1,592,113.43 | 2,705,318.94 | 5,924,566.82 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 15 - B | (322,549.73) | (177,049.73) | (10,770,674.73) |
| | | **13,119,808.70** | **10,499,947.21** | **3,125,570.09** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| நின்ற கணக்குகள் | 16 | 11,244,109.98 | 25,505,747.39 | 39,026,448.57 |
| குறுங்கால ஏற்பாடுகள் | 17 | 1,041,850.14 | 944,850.14 | 944,850.14 |
| | | 12,285,960.12 | 26,450,597.53 | 39,971,298.71 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **25,405,768.82** | **36,950,544.74** | **43,096,868.80** |
| **தேறிய சொத்துக்கள்** | | **139,457,056.72** | **179,010,776.84** | **183,751,170.72** |
| **நிதியீட்டல்** | | | | |
| மூலதனக் கொடைகள் | **18** | 64,646,736.53 | 84,882,283.88 | 161,106,534.39 |
| மூலதன ஒதுக்கம் | | - | - | 2,153,119.00 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 2,895,000.00 | 3,860,000.00 | 13,000,000.00 |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் | | 71,915,320.19 | 90,268,492.96 | 7,491,517.33 |
| | | **139,457,056.72** | **179,010,776.84** | **183,751,170.72** |

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

## 2017.12.31 ஆம் திகதியுடன்

## நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டக் கூற்று

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2017 | 2016 சீராக்கல் செய்யப்பட்ட கணக்கு | 2016 |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்** | | | | |
| பொதுவான செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மிகைகூ (குறை) | | (18,498,672.77) | 126,328,600.53 | 29,701,310.73 |
| **காசல்லாத மாற்றங்கள்** | | | | |
| தேய்மானம் | 8 | 22,753,655.63 | 17,342,828.91 | 15,758,474.58 |
| குத்தகை காணி தேய்மானம் | | 779,041.10 | 3,474,228.26 | 3,474,228.26 |
| தேய்வடைந்த சுனாமி நிதி உதவி | | - | - | (7,253,000.00) |
| தேய்வடைந்த மூலதனக் கொடை | | (98,103,450.04) | (65,660,692.66) | - |
| தேய்வடைந்த கருத்திட்ட நிதி | | (4,332,453.39) | (1,559,734.31) | - |
| தேய்வடைந்த மூலதன ஒதுக்கம் | | (2,153,119.00) | (2,153,119.00) | - |
| தேய்வடைந்த மீள்மதிப்பீட்டு சேர்மம் | | (10,105,000.00) | (9,140,000.00) | |
| மூலதனம் - உபகரணம் கொடை | | 1,143,652.18 | - | - |
| தடுத்துவைத்த உழைப்புக்களின் அதிகரிப்பு / குறைவு | | 93,370,600.63 | (12,169,202.74) | - |
| செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | (27,782,338.59) | 3,742,805.19 | 17,263,506.37 |
| குறுங்கால ஒதுக்கங்களின் அதிகரிப்பு | | 97,000.00 | (192,761.00) | (192,761.00) |
| இருப்பு அதிகரிப்பு | | (20,604.72) | 174,444.12 | 174,444.12 |
| கிடைக்க வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | 20,204,055.65 | 2,819,037.20 | (3,216,462.78) |
| முன்செலுத்தல்களின் அதிகரிப்பு | | 1,980,751.31 | (2,074,913.33) | (2,077,913.33) |
| பணிக்கொடைப் பங்களிப்பு | | 4,522,658.50 | 1,577,313.04 | 1,577,313.04 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசோட்டம்** | | **(16,144,223.51)** | **62,508,834.21** | **55,209,139.99** |

| | | | | |
|---|---|---|---|---|
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (22,274,875.02) | (33,534,830.07) | (33,534,830.07) |
| குத்தகை காணிக் கொள்வனவு | | - | (18,317,757.08) | (18,317,757.08) |
| நீண்டகால கிடைக்க வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | (920,553.29) | 31,909.30 | 31,909.30 |
| முதலீட்டுப் பயன்கள் | | 1,694,417.55 | 5,923,857.95 | 4,469,934.05 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(21,501,010.76)** | **(45,896,819.90)** | **(47,350,743.80)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | | |
| பணிக்கொடை செலுத்தல் | | (178,687.50) | (73,425.00) | (73,425.00) |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி அதிகரிப்பு / குறைவு | | (465,404.00) | - | - |
| மூலதனக் கொடை பெறுகை | | 500,000.00 | - | 10,563,557.85 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(144,091.50)** | **(73,425.00)** | **10,490,132.85** |
| காசும், காசுக்குச் சமமானவைகளினதும் தேறிய குறைவு | | (37,789,325.77) | 16,538,589.30 | 18,348,529.03 |
| ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 42,046,055.76 | 23,697,526.73 | 23,697,526.73 |
| **ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவையும்** | **13** | **4,256,729.99** | **40,236,116.03** | **42,046,055.76** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

### 2017.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமைமாற்றம் பற்றிய கூற்று

(ரூபா)

| | மூலதனக் கொடை | மூலதன சேர்மம் | மீள்மதிப்பீட்டுச் சேர்மம் | தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்கள் | மொத்த உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|
| **2016 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி** | **150,542,976.54** | **2,153,119.00** | **13,000,000.00** | **(23,890,904.83)** | **141,805,190.71** |
| முன்னைய ஆண்டின் தவறுகளை சீர் செய்தல் | - | - | - | - | - |
| **2016 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **150,542,976.54** | **2,153,119.00** | **13,000,000.00** | **(23,890,904.83)** | **141,805,190.71** |
| **விரிவான வருமானம்** | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | 31,382,422.16 | 31,382,422.16 |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் | 10,563,557.85 | - | - | - | 10,563,557.85 |
| **2016 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **161,106,534.39** | **2,153,119.00** | **13,000,000.00** | **7,491,517.33** | **183,751,170.72** |
| முன்னைய ஆண்டின் தவறுகளை சீர் செய்தல் | (76,224,250.51) | (2,153,119.00) | (9,140,000.00) | 82,776,975.63 | (4,740,393.88) |
| **2017 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **84,882,283.88** | **-** | **3,860,000.00** | **90,268,492.96** | **179,010,776.84** |
| **விரிவான வருமானம்** | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | (18,353,172.77) | (18,353,172.77) |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் | (20,235,547.35) | - | (965,000.00) | - | (21,200,547.35) |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **64,646,736.53** | **-** | **2,895,000.00** | **71,915,320.19** | **139,457,056.72** |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. : வீஊவை/சீ/என்சீபீஏ/2017/01/70 මගේ අංකය / உமது இல. / Your No. : දිනය / திகதி / Date : 2018 ஒக்தோபர் 17

தலைவா்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாறற்ல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரச்சட்டத்தின் 22(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிச் செயலாற்றல் கூற்றில் ஆண்டிற்கான தேய்மானமாக ரூபா 22,414,241 காட்டப்பட்டபோதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 22,753,655 ஆகக் காட்டப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான நிகர காசுப்பாய்ச்சல் ரூபா 339,414 குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களது பெறுமதி ரூபா 22,692,724 ஆகும். எவ்வாறாயினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் அது ரூபா 22,274,875 ஆகக் காட்டப்பட்டமையால் முதலீட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 417,843 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(iii) தொழிற்படு மூலதன நடவடிக்கைகளால் உருவாகிய காசுப்பாய்ச்சலைக் கணிக்கும்போது மீண்டும் கூறப்பட்ட (Restated) பெறுமதிக்குப் பதிலாக அச் சீராக்கலை மேற்கொள்வதற்கு முன்னரான பெறுமதி கருத்திற் கொள்ளப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகி நிகர காசுப்பாய்ச்சல் மற்றும் காசு மற்றும் காசுக்கு நிகரானவை என்பன முறையே ரூபா 19,559,200 மற்றும் ரூபா 1,809,940 என அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

முன்னைய ஆண்டுகளின் பொருட்டு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட தவறைத் திருத்தஞ் செய்ததன் காரணமாக 2016 ஆம் ஆண்டின் இலாபம் 325 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 96,627,290 அதிகரிப்புக்குள்ளாகியபோதும், அத்தவறை நிவர்த்தி செய்வதற்குரிய மீண்டும் வெளியிடப்படல் சம்பந்தமான 54 ஆம் நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டிய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால், ரூபா 33,202,652 பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானமாகியபோதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவினை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 க்கமைய மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 10 செயற்திட்ட நிதியங்களில் நெடுங்காலமாக நிலவிய கணக்கீட்டு வழுவின் காரணமாக 4 செயற்திட்ட நிதியங்களில் ரூபா 1,657,001 வரவு மீதி மற்றும் 6 நிதியங்களில் ரூபா 3,249,114 கூட்டுத் தொகையுடைய செலவு மீதி என்பன ஏற்பட்டிருந்தன. அவற்றை இனங்கண்டு தீர்வு செய்யாது ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டு ரூபா 1,592,113 பெறுமதியுடைய செலவு மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கெனப் பெறப்பட்ட மூலதன மானியங்களுள் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் ரூபா 18,317,757 பெறுமதியான காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக்காணியின் பெறுமதி மூலதனமாக்கப்படாது அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் அவ்வாண்டிற்கான வருமானத்திற்கெதிரே எதிரீடு செய்யப்பட்டிருந்தது. இத் தவறு மீளாய்வாண்டின்போதும் திருத்தஞ் செய்யப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை நிதியேற்பாடு ரூபா 129,984 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்பவற்றுக்கிடையேயான உள்ளகக் கொடுப்பனவுகள் முறையாகப் பதிவு செய்யப்படாமையால் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபை நிதியத்திடமிருந்து பெற வேண்டியிருந்த மீதியில் ரூபா 842,874 வேறுபாடும் அதிகாரசபை நிதியத்திற்கு வழங்க வேண்டிய மீதியில் ரூபா 3,236,982 வேறுபாடும் அவதானிக்கப்பட்டன.

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியான ரூபா 6,739,327 மூன்று ஆண்டுகளுக்கு அதிகமாகவும் நிதியத்திடமிருந்து அதிகார சபை பெற வேண்டிய மீதியாக ரூபா 7,582,201 மூன்று ஆண்டுகளுக்கு அதிகமாகவும் இருந்தபோதும் அம்மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்பாடற்றவாறிருக்கும் யுனிசெப் மற்றும் சேவ் த சில்ரன் நிதியங்களிலிருந்து முறையே 2006 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலிருந்து பெற வேண்டியவனவாக ரூபா 235,379 மற்றும் ரூபா 256,510 என நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டபோதும், அம்மீதிகளை அறவிடுவது நிச்சயமற்றதாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தீர்வு செய்யப்படாதிருக்கும் முற்பண மீதியில் இருந்த ரூபா 252,387 முற்பணத்தை 2 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிராமணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசன் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 104(1), (3) | மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட வாகன விபத்து தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்பானவர்கள் நிச்சயிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | 2017 டிசெம்பர் 31 உள்ளவாறிருந்த ரூபா 39,401,325 பெறுமதியான கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிகிக்கூற்றுக்களின் பிரகாரம், அதிகார சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 18,498,673 பற்றாக்குறை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 126,328,601 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேறு ரூபா 144,827,274 நலிவுக்குள்ளாகியிருந்தது. முன்னைய ஆண்டுகளுக்கான மூலதன மானியக் காலக் கழிவுக்கான ரூபா 87,517,369 சீராக்கல் உள்ளடங்கலாக 2016 ஆம் ஆண்டினது நிதிக்கூற்றுக்கள் மீண்டும் வெளியிடப்பட்டமை காரணமாக அவ்வாண்டின் மிகை ரூபா 96,627,290 அதிகரித்தமையும் தேசிய திட்டத்தை அமுலாக்குவதற்குப் பெறப்பட்ட நிதியேற்பாடு ரூபா 114,583,496 குறைவடைந்தமையும் மேற்படி நிதிப் பெறுபேற்றின் பற்றாக்குறைக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2014, 2016 ஆம் ஆண்டுகளில் அதிகார சபை முறையே 3,631,016 மற்றும் ரூபா 126,328,601 மிகையைப் பெற்றிருந்ததுடன், 2013, 2015, 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1302,856, ரூபா 1,011,985, ரூபா 18,498,673 என பற்றாக்குறைக்குள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்ததன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 36,258,920 ஆகவிருந்த பங்களிப்பு மீளாய்வாண்டில் ரூபா 212,628,898 வரை முன்னேறியவாறான அபிவிருத்தியை அடைந்திருந்தது.

## 3.2 நிறுவனத்திற்கெதிரான சட்டபூர்வ நிகழ்வுகள்

அதிகார சபையில் பணியாற்றிய பெண் கணக்காளர் 2010 ஆகஸ்ட் 25 தொடக்கம் சேவையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தார். அதிகார சபைக்கு எதிராக அவரால் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் தொடர்ப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டவாறிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபை அமைக்கப்பட்டு 20 ஆண்டுகளை கடந்திருந்தும் 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தவிர்ப்பதற்கும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்குள்ளான சிறுவர்களை பாதுகாப்பதற்கும் அவர்களை பராமரிப்பதற்குமான தேசிய கொள்கை ஒன்றை தயாரிப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது சிறுவர் துஷ்பிரயோகம், துன்புறுத்தல், இம்சை, பராமரிப்பின்மை, சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பாக 9,014 புகார்கள் கிடைக்கப்பெற்றதுடன், 2018 பெப்ரவரி 15 ஆந் திகதியளவில் அப்புகார்களில் 2,613 புகார்கள் மாத்திரமே தீர்வு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, மீளாய்வாண்டில் பெறப்பட்ட புகார்களில் 71 சதவீதமானவை தீர்வு செய்யப்பட்டிராததுடன், 2011 தொடக்கம் 2015 வரை பெறப்பட்ட 63,189 புகார்களில் 55 சதவீதமானவை மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்வு செய்யப்படாதிருந்தன. அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெறும் பொதுமக்களது புகார்களை அறிக்கையிடுவதற்கான உத்தியோகத்தர்களுக்கு 273 மடிக் கணனிகளையும், 269 அச்சிடல் இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 118,715,129 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபை வருடாந்தம் பெறும் புகார்கள் சம்பந்தமாக தகவல்களைச் சேகரித்து அறிவிப்பதில் பிரதேச மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்கள் வினைத்திறன் இல்லாதிருந்தமை, தகவல்களைக் கோருதல் மற்றும் விசாரணை

நடவடிக்கைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை மற்றும் முறையான கணக்காணிப்பு மேற்கொள்ளாமை போன்றவற்றால் தீர்வு காணப்படாதிருக்கும் புகார்களது எண்ணிக்கை அதிகரித்தவாறிருந்தது.

(இ) அதிகாரசபை தயாரித்திருந்த தேசிய அபிவிருத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 51 பணிகளுக்கு ரூபா 48 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அதில் ரூபா 3.6 மில்லியனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட 10 பணிகள் முற்றாக அமுலாகவில்லை. 13 பணிகளுக்கான ரூபா 16 மில்லியன் நிதியேற்பாட்டிற்கு அதிகமாக ரூபா 23 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 3.5 மில்லியனுக்கான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட 5 பணிகள் அமுலாகியபோதும், அப்பணிகளை அமுலாக்குவதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்திருக்கவில்லை.

(ஈ) சிறுவர் பாதுகாப்பை சக்திமிக்கதாக்குவதற்கான நோக்கத்துடன் மீளாய்வாண்டின்போது 13 பணிகளுக்கு ரூபா 33 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 5.7 மில்லியன் நிதியேற்பாட்டிலான 5 பணிகள் முற்றாகவே அமுலாக்கப்பட்டிராததுடன், 3 பணிகளுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 11.5 மில்லியனிலும் கூடுதலாக ரூபா 18 மில்லியன் செலவாகியிருந்தது. மேலும், ரூபா 2.5 மில்லியன் நிதியேற்பாட்டுடனான 2 பணிகள் அமுலாக்கப்பட்டபோதும், அதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் ஈடேறவில்லை.

(உ) சிறுவர்களின் பொருட்டான சமூக பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கைளின் கீழ் 12 பணிகளுக்கு ரூபா 23.48 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 1.013 மில்லியன் நிதியேற்பாட்டுடனான 5 பணிகள் முற்றாக அமுலாகாததுடன், ரூபா 9.1 மில்லியன் நிதியேற்பாட்டுடனான 4 பணிகள் அமுலாகியபோதும் ஆண்டின்போது எதிர்பார்த்த நோக்கம் ஈடேறவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

அதிகாரசபையின் முன்னாள் பிரதித் தலைவரது வேண்டுகோளுக்கமைய, 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி அதிகாரசபையின் உதவி முகாமையாளர் (சட்டம்) கையெழுத்திட்டிருந்த சத்தியப் பிரமாணக் கூற்றின் பிரகாரம் இலங்கைக் குடியரசின் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத் தவிர்ப்பு என்பவற்றின் பொருட்டுள்ள அரச இயந்திரத்தையும் நீதித்துறை நிர்வாகத்தையும் குறை கூறியதாகக் குறிப்பிட்டு

முன்னாள் தலைவரால் 2017 யூன் 20 தொடக்கம் அப்பெண் உத்தியோகத்தர் வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தார். சத்தியப் பிரமாண ஆணையாளர் எனும் விதத்தில் உதவி முகாமையாளரது (சட்டம்) பொறுப்பைத் தீர்மானிக்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய சத்தியப் பிரமாண ஆணையாளரை நியமனம் செய்வது தொடர்பான நீதி அமைச்சின் சட்டங்கள், விதிகள், அறிவுறுத்தல்கள் மற்றும் "விசுவாசப் பிரமாணம் மற்றும் பொருள் பெறுபவர் சட்டம்" தொடர்பிலான கட்டளைச் சட்டத்தில் காணப்படும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படாது குறித்த விடயத்திற்கு நேரடியாகப் பொறுப்பை ஒப்படைக்க இயலாது அவ்வுத்தியோகத்தர் வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தார்.

அதிகார சபையின் 1929 ஆம் இலக்கத் தொலைபேசி இலக்கத்திற்குப் பெறப்படும் புகார்கள் சம்பந்தமாகச் செயலாற்றுவதற்குப் பொருத்தமான சாதனத் தயாரிப்பிற்கான விதிமுறைகளை முன்னேற்றுவதற்கு சிபார்சைப் பெறுவதற்காக பெண் மதியுரையாளருக்கு 2016/2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 900,000 வழங்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வறிக்கை பெறப்பட்டு ஓராண்டாகியும் அதில் அடங்கிய சிபார்சும் விதிமுறைகளையும் கடைப்பிடிக்கப்படுவதில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.3 ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (நிகழ்ச்சித்திட்டம்) பதவியை வகித்த பெண் உத்தியோகத்தர் 8 ஆண்டுகளுக்கு மேலாக சம்பளமும் படியும் மீளளிக்கப்படும் அடிப்படையில் அமைச்சில் பணியாற்றுவதற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அப்பதவிக்கு வேறொரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த 4 பிரதான பதவிகள் 07 ஆண்டுகளாக வெற்றிடமாக இருப்பதும் அப்பணிகள் திட்டமிடப்படுதல், அமுலாக்குதல், மேற்பார்வை செய்யப்படுதல் என்பன முறையாக நடைபெறாது போவதற்குக் காரணமாகவிருப்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, உதவிப் பணிப்பாளர் (சட்டம்) சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு அப்பதவி

வெற்றிடமாக இருந்ததுடன், புகார்களைத் தீர்வு செய்வது சட்ட நடவடிக்கைகள் போன்ற பணிகள் முறையாக நடவாமைக்கு அது காரணமாக அமைந்தது.

(ஆ) கனிஷ்ட மட்டத்தின் 06 பதவி வெற்றிடங்கள் காரணமாக அதிகாரசபையின் நாளாந்த பணிகளை நடாத்துவதிலும் உத்தியோகத்தர்கள் விடுமுறையில் செல்லும்போது பணி நிறைவேற்றலில் தாமதத்திற்கும் பிரச்சினைகள் உருவாகுவதறகும் சந்தர்ப்பங்களை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் வெற்றிடமாக இருந்த 116 சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு 2017 டிசெம்பர் 14 ஆந் திகதி தெரிவு செய்யப்பட்டதாகக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. எனினும், கணக்காய்வுத் தினமான 2018 யூன் 28 ஆந் திகதியளவிலும் ஆட்சேர்ப்பு நடைபெற்றிருக்கவில்லை. சிறுவர் பாதுகாப்பை உறுதிசெய்வது சம்பந்தமான அத்தியாவசிய பதவியில் வெற்றிடம் நிலவுவதானது அதிகாரசபை தனது பணியை வெற்றிகரமாகச் செய்வதற்குத் தடையாக உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான 2007 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரின் கடிதம் மற்றும் ஐக்கிய நாடுகளின் 2030 "நிகழ்ச்சி நிரல்" என்பவற்றின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டுமாயினும், அதிகாரசபை மீளாய்வாண்டில் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்படுவது என அறிந்திராமையால் அப்பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அவ்விலக்கை அடையும் விதம், இலக்கினை எய்துவதை அளவிடுவதற்கான சுட்டை இனங்காண்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளக கணக்காய்வு

2013 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் டீஎம்ஏ/2009(i) இன் 3 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த பணியை நிறைவேற்றுவதற்குப் போதுமான பதவியணியினர் அமர்த்தப்படாமையால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டின்போது 12 உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டபோதும், அந்த அவதானிப்புகள் சம்பந்தமாகப் போதிய முகாமைத்துவச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

### 6.2 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் மேலதிகம் 33 இன் 2:14:1 பிரிவின் படி ரூபா 100,000 வரையிலான பொருட்களுக்கும் வேலைகளுக்கும் மாத்திரமே திணைக்களத் தலைவர் தீர்மானம் மேற்கொள்ளலாம். எனினும், அதற்கு முரணாக சர்வதேச சிறுமிகளது தினத்தைக் கொண்டாடுவதற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 160,656 பெறுமதியான பொருட்களையும் வேலைகளையும் பெறுவதற்கு பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.8 பிரிவுக்கு முரணாக அவசர பணியாகக் கருதி நேரடிக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.1(அ) க்கமைய எந்தவொரு அங்கத்தவரும் பொருட் கொள்வனவுக் குழு அல்லது தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழு எனும் இரண்டிலும் பணியாற்றக்கூடாது. எனினும், சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கையில் ஆசிரிய மதியுரையாளர்கள் பயன்படுத்துவதற்காக ரூபா 1,249,245 செலவில் 3 வீடியோ நாடாக்கள் தயாரிக்கும் குழுவினதும் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவிலும் தலைவராக நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் முகாமையாளர் பணியாற்றியிருந்தார். மேலும், பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் 2.8.4(உ) பந்திக்கு முரணாக தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழுவின் தலைவரின் கீழுள்ள நிகழ்ச்சித்திட்ட உதவியாளரும் அக்குழுவின் அங்கத்தவராக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறை தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சில கணக்குகள் நியமங்களுக்கு ஒவ்வாதிருத்தல். |
| (ஆ) மனிதவள முகாமைத்துவம் | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) புகார்களுக்கு தீர்வு காண்பதில் தாமதம் மற்றும் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டங்களது முன்னேற்றம், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் முறையான மேற்பார்வை என்பன இல்லாமை. |
| | (ii) முறையான திட்டமின்றி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல் மற்றும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக அமுலாகாமை. |

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.